செ.வெ.எண்: 921/2017 நாள்: 06.12.2017

**கன்னியாகுமரி மாவட்டத்தில் ஓகி புயலின் தாக்கத்தினால் தடைபட்ட சாலைப்போக்குவரத்து மற்றும் துண்டிக்கப்பட்ட மின் இணைப்புகளை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க, உடனடியாக சீர்செய்யும் வகையில் போர்க்கால அடிப்படையில் நடைபெற்றுவரும் புனரமைப்பு பணிகளை இன்று (06.12.2017) கன்னியாகுமரி மாவட்ட கண்காணிப்பு அலுவலரும் தகவல் தொழில் நுட்ப துறை முதன்மை செயலாளருமான திரு. டி. கே. இராமசந்திரன் இ.ஆ.ப., அவர்கள் நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.**

---

கன்னியாகுமரி மாவட்டத்தில் ஓகி புயலின் தாக்கத்தினால் தடைபட்ட சாலைப்போக்குவரத்து மற்றும் துண்டிக்கப்பட்ட மின் இணைப்புகளை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க, உடனடியாக சீர்செய்யும் வகையில் போர்க்கால அடிப்படையில் நடைபெற்றுவரும் புனரமைப்பு பணிகளை இன்று (06.12.2017) கன்னியாகுமரி மாவட்ட கண்காணிப்பு அலுவலரும் தகவல் தொழில் நுட்ப துறை முதன்மை செயலாளருமான திரு. டி. கே. இராமசந்திரன் இ.ஆ.ப., அவர்கள் நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

கன்னியாகுமரி மாவட்டத்தில் கடந்த 29.11.2017 அன்று பெய்த கனமழையின் காரணமாக, ஓகி புயலால் பாதிக்கப்பட்ட அழகிய பாண்டியபுரம் பேரூராட்சிக்குட்பட்ட பால்குளம் பகுதியில் ஏற்பட்டுள்ள மின்தடைகளை சீர் செய்யும் பொருட்டு, பாதிப்படைந்த மின் கம்பங்களை அகற்றி, புதிதாக மின் கம்பங்கள் நிறுவப்பட்டு வருகின்றன. அம்மின்கம்பங்களை உரியமுறையில் உடனடியாக நிறுவி, மின்வசதி கிடைக்க போர்க்கால அடிப்படையில் நடவடிக்கை எடுக்குமாறும், அதனை தொடர்ந்து, அழகியபாண்டியபுரம் ஊராட்சி ஒன்றியத்துக்குட்பட்ட கொத்தளம்பள்ளம் பகுதியில் ஓகி புயலின் தாக்கத்தினால் போக்குவரத்துக்கு இடையூராக சாலையில் விழுந்த மரங்களை வெட்டி எடுப்பதற்காக தமிழ்நாடு மின்சாரவாரியம் சார்பாக திருப்பூரில் இருந்து வந்துள்ள தமிழ்நாடு மின்சாரவாரிய ஊழியற்குழுவினர் மற்றும் நெடுஞ்சாலைத்துறை ஊழியர்களின் மரம் அறுக்கும் இயந்திரங்களையும் பார்வையிட்டு ஆய்வு செய்தார். துரிதமாக இப்பணிகளை முடித்து சாலை போக்குவரத்தை சீர்செய்ய அறிவுறுத்தினார்.

மேலும், ஓகி புயலால் பாதிக்கப்பட்டு, முற்றிலுமாக மின்இணைப்பு துண்டிக்கப்பட்டு, தவித்து வரும் கீரிப்பாறை சோதனைச்சாவடிக்குட்பட்ட பகுதிகளில் உள்ள குடியிருப்பு வாசிகளின் தேவை அறிந்து, உடனடியாக மின் இணைப்பு வழங்கும் பொருட்டு தமிழ்நாடு மின்சாரவாரியம் சார்பாக பல்வேறு மாவட்டங்களில் இருந்து வரவழைக்கப்பட்ட மின் ஊழியர்களை கொண்டு மின்இணைப்பு வழங்குவதற்கான முன்னேற்பாடு பணிகளை மாவட்ட

நிர்வாகம் மேற்கொண்டு வருகிறது. அதனைத் துரிதப்படுத்தும் வகையில், பல்வேறு மாவட்டங்களிலிருந்து வரப்பட்ட மின் ஊழியர்களை கீரிப்பாறை சோதனைச்சாவடியில் மாவட்ட கண்காணிப்பு அலுவலரும் தகவல் தொழில் நுட்ப துறை முதன்மை செயலாளருமான திரு.டி.கே.இராமசந்திரன் இ.ஆ.ப., அவர்கள் நேரில் சந்தித்து, பணிகளை துரிதமாக மேற்கொள்ளும்படி அறிவுறுத்தினார்.

அதனை தொடர்ந்து, கன்னியாகுமரி மாவட்டத்தில் ஒகி புயலின் தாக்கத்தினால் கீரிப்பாறை முதல் மாராமலை வரையிலான வனப்பகுதிகளுக்குட்பட்ட சாலை பகுதிகளில் போக்குவரத்து முற்றிலுமாக முடங்கியிருப்பதற்கு காரணமாக சாலையில் விழுந்த மரங்களை வெட்டி எடுக்கும் பணிகளையும், ஜே.சி.பி-யை கொண்டு, மரத்துண்டுகளையும், குப்பைகளையும் அகற்றி சாலை போக்குவரத்தை சீர்செய்யும் பணிகளையும், திருவட்டார் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட காளிகேசம் பகுதியிலிருந்து பாலமோர் பகுதி வரையிலான சாலை போக்குவரத்தை சீர்செய்யும் பணியில் இருந்த பணியாளர்களையும், ஒகி புயலின் தாக்கத்தினால் அடித்து செல்லப்பட்ட காளிகேசம் பகுதியில் உள்ள தரைப்பாலத்தை சீர்செய்யும் பணிகளையும் திரு.டி.கே.இராமசந்திரன் இ.ஆ.ப., அவர்கள் நேரில் சென்று பார்வையிட்டு ஆய்வுசெய்தார். உடனடியாக இப்பணிகளை விரைந்து முடித்திடவும், இயல்பு நிலையில் சாலை போக்குவரத்து அமைய வேண்டும் எனவும், மேற்கண்ட புனரமைப்பு பணிகளில் ஈடுபட்டுள்ள அதிகாரிகளுக்கு அறிவுறுத்தினார்.

இந்நிகழ்வுகளின் போது, நாகர்கோவில் கோட்ட ஆய அலுவலர் திரு. அப்துல்லா மன்னன் உடனிருந்தார்.

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், கன்னியாகுமரி மாவட்டம்.**